**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

**பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2019/2020**

**விளையாட்டுக்களில் தனிச் சிறப்பு வாய்ந்த**
**திறமைகளை / திறன்களைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான**
**விஷேட உள்ளெடுப்பிலான பல்கலைக்கழக அனுமதி**

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தினால் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் மற்றும் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உடற்றொழில் கல்வி ஆகிய பட்ட பாடநெறிகளைத் தொடர்வதற்காக விளையாட்டுத் துறையில் தமது திறமையினை வெளிப்படுத்திய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வரவேற்கிறது.

**விஷேட அனுமதிக்காக பூரணப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகள்:**

- ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றிருத்தல் அல்லது பங்கு பற்றி இருத்தல்.
- பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அல்லது ‘சார்க்’ விளையாட்டுப் போட்டிகளில் குறைந்தது தங்கம், வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கங்களைப் வென்றிருத்தல்.
- பொதுநலவாய விளையாட்டுக்கள், ஆசிய விளையாட்டுக்கள், சார்க் விளையாட்டுக்கள் ஆகியவற்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட உலகக் கிண்ணத்திற்கான கிரிக்கெட், காற்பந்தாட்டம், றகர், கூடைப்பந்து மற்றும் கரப்பந்தாட்டம் அல்லது வேறு ஏதாவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்ட விளையாட்டில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தும் தேசிய அணிகளில் அங்கத்தவராக இருத்தல்.

இவ் விஷேட அனுமதியின் கீழ் குறித்த கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், உரிய கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு முன்பு, கட்டாயமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் பொருத்தமான அடிப்படைக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

மேற்கூறிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து **2020 டிசம்பர் மாதம் 21ம் திகதி** வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பின்வரும் மாதிரியில் உள்ளவாறு நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தை சம்பந்தப்பட்ட சான்றுப் பத்திரங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் இணைத்து **2020 டிசம்பர் மாதம் 21ம் திகதி** அன்று அல்லது அதற்கு முன்பாக sportsintake@ugc.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி **2020 டிசம்பர் மாதம் 21ம் திகதி** ஆகும்.

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்களும், உரியவாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

இல. 20, வோட் பிளேஸ்,
கொழும்பு 07.
18-நவம்பர்-2020

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.